துரிதமுடன்திரிபலையின்கஷாயத்தாட்டி, காற்றாலேமுன்போலேபுடத்
தைப்போடு கருவாகபணவிடைதான்கொள்ளச்சொல்லு,பார்த்தாலேகு
ஷ்டமெல்லாந்தீருமப்பாபண்பானமேகமோடீளைபோமே. ௨௭௬

ஈளையொடுமந்தாரகாசம்போகும் இன்பமுடன்கரிசாலைச் சாறு நா
ழி. கோளையென்றபசுவின்பால் படிதானொன்றுகூட்டியதிற் சர்க்கரையு
ம்பலம்பத்தாகும் பேளையென்றபாகுபதம் வருதல்கண்டுபெலமான மிள
குபலம் பதினாறப்பா. வாளநல்லாப்பொடித்திட்டுலேகியம்போற்கிண்டி
மைந்தனேநெய்யுழக்குத்தேன்றான்பாதி. ௨௭௭

பாதிவிட்டுக்கிண்டியதில்லேகியமப்பா பாங்கானசெந்தூரம்பணவி
டைகால்கூட்டி, சாதியமாயிருவேளைமண்டலந்தான்கொள்ளச்சகலநோ
ய்தீரும ா தாம்பிரத்தின்வேகம், ஆதியாப்புளிபுகையுந்தவிர்த்து நல்ல
ஆன்பானபசுநெய்யும் வெள்ளாட்டுக்கண்டம்,ஓதியதோர்சிறுபயறுதுவ
ரையாகும் உத்தமனேவழுதலையுமுருங்கைப்பிஞ்சே, ௨௭௮

பரும்பாடுதீர மிளகுலேகியம்.

பிஞ்சாகுமின்னமொரு லேகியங்கேளு பெலமானபொஸ்தக்காய்க
ர்க்கடகசிங்கி, தஞ்சமென்றவகைக்கு ஒருபலமாய்வாங்கித்தன்மையுடன்
மராட்டிமொக்கு கழஞ்சுசேர்த்து, மிஞ்சாமற்பொடி செய்துபனை வெல்
லந்தான் மீறாமல்மருந்திடைக்குபாகுசெய்து,அஞ்சாமற் சூரணத்தைக்
கொண்டிக்கிண்டி அப்பனேதேனையும்விட்டுக்கிண்டே. ௨௭௯

கிண்டியேபாக்களவுலேகியந்தான் கிருபையுடனிருவேளையஞ்சுநா
ளுங், கொண்டிடவேபெண்களிடஉதிரப்பாய்ச்சல்கொடுமையென்றபெ
ரும்பாடுதீருமப்பா, உண்டிடவேபத்தியந்தானொன்றுமாகா உத்தமனே
வறுத்தவுப்புமிளகுகூட்டு, சுண்டலென்றதுவரையுடன் சுண்டலாகுஞ்
சுகமானவெந்நீருஞ்சாந்தமாமே. ௨௮௰

தேற்றாங்கொட்டைலேகியம்.

சாந்தமாமின்னமொருலேகியங்கேள் சமர்த்தான பலமைந்துதே
ற்றாங்கொட்டை, சேர்ந்ததொரு திரிகடுகுதிரிபலாதி சிற்றரத்தை சீர

கம்வகைக்கரைபலந்தான், பாந்தமாய்ப்பொடிசெய்தூவைத்துக் கொண்டு * பஞ்சதாரைபலம்நாலு படியாவின்பால், தோய்ந்திடவே கலக்கிய வைப்பாகுசேர்த்துத் துரிதமுடன் றூள்கொட்டிக்கிளருவாயே. ()

* பஞ்சதாரை-சர்க்கரை.

கிளாயிலேபசுவினெய்படி தான்வாரு கிழிமக்கித்தேன்பாதிவிட்டுக் கிண்டி, களாயிலேபாக்களவு லேகியத்தில் கருவானநாகபற்பம் கூட்டித் தின்னு, அளாயிலேயிருவேளை இருபதுநாள்கொள்ளு அப்பனேமூலநோயகலுஞ்சொன்னோம், இளாவேசயமுடனேயத்திசுரவாதமிதமான அக்கினியாமந்தம்போமே. ௨௮௨

## திரிகடுகுலேகியம்.

மந்தமொடு மூலத்தின்வாயுதீரும்மைந்தனே புளிபுகையு மாற்றச் சொல்லு அந்தமுடனின்னமொரு லேகியங்கேள் அன்பான திரிகடுகுவகைபலந்தானென்று சொந்தமுடன் சீரகமுங்கிராம்புயேலம்துரிதமுடன்வகைக்குஅரைப்பலமேவாங்கி விந்தையாய்ச்சுத்திசெய்துசூரணித்து விதமானபனவெல்லம்பலந்தானஞ்சே. ௨௮௩

அஞ்சாகும்பாகுபோற்காய்ச்சிக்கொண்டு அப்பனே சூரணத்தைப்பாய்ச்சிக்கிண்டி, மிஞ்சாமல்செய்யுமக்கு அரைக்கால்தேனுரன் விட்டுமதைலேகியம்போற் கிண்டிவாங்கிக், கொஞ்சமாய்க்கொட்டைப் பாக்களவுமைந்தா குணமாக இருவேளையிருபதுநாள்கொள்ளு, நெஞ்சாரத் திருகிற வியாதிசேனு நிலையானவாதமோடுவாயுபோமே. ௨௮௪

வாயுவொடுஉஷ்ணமும் பித்தவாய்வும்வயிற்றுவலிகடுப்புளைவுளரிச்சல்பேதி தேயுவென்றஅக்கினியாமாந்தம்வாந்தி தீராதஅஸ்திசுரமஸ்திவெட்டை, பாயுறதோர்பொருமலென்றவாயுக்கிராணிபறக்குமடாலேகியத்தில்அயச் செந்தூரம், பேயுமின்றிப்பணவிடைதான் கூட்டியுண்ணப்பெலமானவாயுவெல்லாம்புரண்டுபோமே, ௨௮௫

## கபாடலேகியம்,

புரண்டுபோ மின்னமொருலேகியங்கேள் பெலமான ஆலரசு அத்திநாவல், முரண்டயமாம்பட்டைக்குக்கருவேல்பட்டை மூர்க்கமுடன்வெள்வேலும் விடதாரைவேரும், திரண்டுநின்றவிதன்னம்பூலன்னதுமே ஒன்றாய்த் திறமாகப்பலமிரண்டுமிடித்துமைந்தா, இரண்டுமேபாளையிட்டுக்குறுணிநீர்தானிட்டுமதையெட்டொன்றாயிட்டுக்கேளே ௨௮௬

கேளப்பாகியாழத்தைவடித்துக்கொண்டு கிருடையுடன் சக்கையெல்லாமெறிந்துபோடு. தாளப்பாபூண்டுரித்துப பலந்தானெட்டு த

ருவாக அதிற்போட்டுவேகவைத்து, கோளப்பாசலமெல்லாங்குறுகிவெ
ந்தாற் குணமாகமத்திட்டுக்கடைந்துநீயே, நாளப்பாபனவெல்லம் பலந்
தானுநன்மையுடனதிற்போடப்பாகுபோலாம். உ௮௭

பாகுபோல்பதமாகும்போதிலேதான்பக்குவமாய்ச்சாதிக்காய்பினி
ஓமம், ஏகவைவகைக்கிரண்டு விராகனிடையாகுநேராகப்பொடி செ
ய்துபோட்டுக்கிண்டி, பாகுபோலிளம்பதமாயிருந்தகாணும்பக்குவமாய்
ச்சலம்வற்றக்கிண்டும்போது, ஏகமாய்ப்பசுவினெய் கொஞ்சம்விட்டு எ
ன்மகனேலேகியம்போல்கிண்டிவாங்கே. உ௮௮

வாங்கியேயொல்லிக்காய்வீதந்தானும் எமர்த்தனேயிருவேளையிருட்
துநாள்கொள்ளத், தாங்கிநின்றமூலமொடு கடுப்புரத்தந்தருவானசீழுட
னேமூலக்கிராணி ஓங்கிநின்றமூலத்திற் சேர்ந்தநோய்கள்ஓடுமடா கார
மது மட்டாய்கூட்டு, பாங்குடனே புளிகூட்டுபத்தியமோயில்லை பாலக
னேசெந்தூரங்கூட்டித்தின்னே. உ௮௯

செந்தூரமுன்சொன்னநாகமப்பா தின்றும்ரில்தீராத ரோகமுண்
டோ, விந்தூறுமெலும்புருக்கிரோகந்தீரும்வித்தகனேதேகமது புஷ்டி
யாகும், செந்தூரமுந்நூற்றிற்கூறுவாய்ச்சொன்னேன்திறமாகஅனுபானே
மறிந்துகொள்ள, செந்தூரில்முருகனைப்போல்ரோய்கள்நீங்குந்திறமான
வயித்தியபூரணமிதுதானே. உ௯௰

## தூதுவளை லேகியம்.

பூரணமாமின்னமொரு லேகியங்கேள் புலத்தியனேநானூற்றில் பு
னிதமாக, காரணமாமுருங்கைப்பூ தூதுவளப்பூவும்கணக்காகவகைக்
குநால்பலம்நிறுத்து தாரணியில்*சதாவேரிக்கிழங்குமூணுகருவான ந
ன்னாரிவேர்பலமிரண்டு, தாரணமாய்நிலப்பனையுநெருஞ்சிமுள்ளும்கரு
வாகவகைக்கு ஒருபலமாய்க்கூட்டே. உ௯௧

* சதாவேரி தண்ணீர்விட்டான்கிழங்கு.

கூட்டியேசூரணித்துப் பசுவின்பால்தான்குறுணியிலே போட்டு
மேகுழம்புபோலே, காட்டியேவற்றிவரும்போதுமைந்தாகதருவான் சீ
னிபலம் பன்னிரண்டும்போட்டு. நாட்டியேகிளரயிலேபசுவி னெய்தான
லமாகப்படியனாமேனுமுழக்குவிட்டு, கேட்டியாலேகியம்போற்கிண்டிவா
ங்கிக் கிருபையுள்ளகணபதிக்குப் பூசைசெய்யே. உ௯௨

செய்துமேதான்றிக்காயளவுகொள்ளத்திருகிறவியாதிதனைத்திறமா
ய்க்கேளு எய்துகின்றபிரமியமுமேகநோயும் இன்பமுள்ளஎலும் புருக்
கிப்பிரமேகந்தான, பெய்துமே மண்டலத்திற் றீர்ந்துதாதும்பெலமுண்

டாயிந்திரிய பெலமுண்டாகும், செய்துமேலேகியத்தில்மேகநோ யெல்
லாந் திருமடாபத்தியமோ யில்லையாமே. உகூங

இல்லையென்றுமயங்காதே யின்னமொன்று என்மகனேசாதிக்காய்
சாதிபத்திரி, வல்லென்றகிராம்புச்சிறுநாகப்பூவு,வகையானஅமுக்கரூபற
ங்கிப்பட்டை, கொல்லென்றசந்தனமுங்கொடுவேலிவேரும்கூர்மை யுட
ன்பச்சைக்கர்ப்பூரமொன்றாய் சல்லையென்றுநினையாதேகாம்பலமாய்வா
ங்கித் தான்பொடித்துச் சரியிடைதான்சீனிகூட்டே. உகூச

## திப்பிலிரசாயனம.

கூட்டியே பசுநெய்யால்பிசைந்துமைந்தா குணமான பீங்கானில்
வைத்துக்கொண்டு, நாட்டியேபாக்களவு யிரண்டுவேளை நன்மையுடனி
ருபதுநாள்கொள்ளும்போது, தாட்டிகமாய்மேகநோய் நீங்குமப்பா தய
வாக இன்னமொரு ரசாயனங்கேள் காட்டுகிறேன்திப்பிலியும்பலம்பத்த
ப்பாகருவானமிளகுடனே சுக்குபலமஞ்சே. உகூரு

பலமொன்று * இருசீரக * மிரண்டுஓமம் பாங்கான * அரத்தை
ரண்டு * திரிபலாதி நலமானலவங்கமுடனலவங்கப்பத்திரிநன்மை யுள்
ளலவங்கபட்டை தாளிசப்பத்திரி, பெலமானகொடுமேலி யேல மப்பா
பேசியதோர்பதினைந்து பலமொவ்வொன்று, தலமாகவிளவறுப்பாய்சூ
ரணித்துத்தன்மையுடனவ்விடைக்குச் சீனிசேரே. உகூசா

* இருசீரகம் கருஞ்சீரகம் நற்சீரகம்.

* இரண்டு ஓமம் குருசானியோமம்

* அரத்தைரண்டு சிற்றரத்தைபேரரத்தை,

* திரிபலாதி கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய்.

சேர்த்துமேதேன்விட்டுப் பிசைந்துமைந்தாதிறமானபீங்கானிற்ப
தனம்பண்ணி, காத்துமேதாம்பிர செந்தூரங்கூட்டிக் கனமாக வுண்டி
டவே காசரோகம், போர்த்துமே மந்தாரகாசக்கூடப் புலத்தியனே சய
மிருமல் இளைப்புக்கக்கல், ஆர்த்துமேசேத்துமந்தொண்ணூற்றாறும்அ
கலுமடாமண்டலத்திலறிந்துபாரே. உகூஎ

## கக்குச்சூரணம்,

பாரேநீஇன்னமொருசூட்சங்கேளுபாங்கானசுக்கதனைச்சூரணமே
பண்ணி காரேநீகரும்புசர்க்கரையவ்விதங் கலந்துமேயிருவேளை யேழு
நாளுஞ் சேரேநீதின்றுவரவாய்வுதீருந் திறமானதீபனமுண்டாமப்பா,
ஊரெல்லாமருந்திருக்கக்காட்டிற்போய்நீ உலுத்தரைப்போலலையாதே
உண்மைகேளே. உகூஅ

## திப்பிலி மிளகு சூரணம்.

உண்மையென்ற திப்பிலியைச்சூரணமேசெய்து உகமையுடன்றேனிலேகுழைக்துத்தின்ன, வண்மையுடன் புகைக்திருமுஞ்சேத்துமநோய்தான் மாறியேபசியுண்டா மருவிப்பாரு நன்மையுடன்மிளகுதனைசூரணமேசெய்துநலமானபசுநெய்யிற்சினிகூட்டி, தண்மையுடன்மூன்றுநாள் அந்திசந்தி தானருந்த சளியிருமல்தவறிப்போமே, ௨௯௯

## திரிகடுகுசூரணம்,

தவறிப்போம் திரிகடுகுசூரணத்தால் தருவானமந்தமுடன்கழிச்சல்தீருந், தவறிப்போந் தேனிமேலகொண்டாயானல் தருகாது சங்கீசீதளங்கள்தானுந், தவறிப்போம் பனைவெல்லங்கூட்டியுண்ணதண்மையுள்ளவயிற்றுநோய்தானேதீருந், தவறிப்போஞ்சகலநோய்தனைக்கண்டால் தருகாதுவயித்தியன்பேர் சொல்லுமுன்னே. ௩௱

## முப்பூவுக்கு விபரம்.

முன்னமே முப்பூவை மறைத்தநாலே முழுதுவது வகைவிபரஞ்சொல்லக்கேளு, நன்னயமாம்நாதமென்றால் பூமிநாதம் நாதாக்கள்பூசித்துவாழ்ந்தநாதம், அன்னே உமைநாகமதிற் கொஞ்சம் வாங்கி அப்பனே பிரிதிவியின் அண்டஞ்சோத்து, சொன்னமொழிதவறுமல் ✻ அனுப்பினுட்சுவையுஞ்சேர்த்தரைக்கத்தாளிச்சார்கருக்கும்ப, ௩௱௧

✻ அனுப்பினுட்சுவை-உப்பு.

நிரம்பவென்றலரைநாழியரைத்தாற்போதும் நிலவரமாய்ச் சிப்பியுடசாம்பலுக்குள்வைத்து, ஐம்பதெருபுடம் போட சதாசிவனுமங்கே அடங்கிவெள்ளைநிறமாகிக் குருவுமாவார், செம்பொனென்ற வாதமுடன் வயித்தியமுஞ்சிந்தித் திறமானவாசிசித்திகுளிகைசித்திசம்புசதாசிவனுடையபாதஞ்சித்தி தயாநிதியாந்தாயினிடநாதத்தாட்டே. ௩௱௨

## இரசவாதத்திற்கு வாலைரசசெந்தூரம்.

ஆட்டவென்றல் குருவில்லாதாட்டமுண்டோ அப்பனே வாலைரசச்செந்தூரத்தில், நாட்டமென்ற பலம்நிறுத்துப் பாதிகெந்திநன்மையுடன் பேய்ச்செம்பின் கிழங்குசாற்றில், ஆட்டுவாய்காண்மூன்றுபின்புலர்த்தி அப்பனேகுப்பியிலேமூன்றுசாமம, வாட்டமில்லாதே யெரித்துமுன்போற்கெந்தி மாட்டியேயைந்துவிசைஎரித்துவாங்கே ௩௱௩

## முன்சொன்னவைப்புக்குவிபரமும்

## வெடியுப்புசுத்திவிபரமும்,

வாங்கினற் குப்பியடியிருக்குமப்பா மைந்தனேசெந்தூரமேலேறுது, தூங்கியேயலையாதே சொல்லக்கேளு துறையாக செலவுக்குக்கிட்டி

மப்பா, ஒங்கியேசகலனே‌ுப் திருமப்பா உத்தமனேமுன்சொன்னசீடனு க்கு தாமகியேவாமைமுயுட கிழங்குசாற்றில் தாண்காய்ச்சிவெடியுப்புகூட் டநன்றே, ௩௱௪

## சைவீரவைப்பு.

நன்றப்பா சைவீரவைப்புதானும் நலமானவெடியுப்பு நாலுபங்கு நின்றப்பாரசத்தைவிடு ரண்டுபங்கு நிலையான நவச்சார மிரண்டுபங்கு, கண்டப்பாசினமோர்பங்குகூட்டிக் கருவாகத் தான்பொடித்துக்கலையத் திட்டு, முன்றப்பா கெந்தகம்போல நீர்வாங்கி முட்டையமைசைவீர வைப்புநன்றாம். ௩௱௫

வைப்பானதிரவுகோளீதுதானப்பா மார்க்கமுடன் சித்தாதிசெய்யு ம்வித்தை, செப்பாதசதுர்முகத்தான் றிருவகமுன்சொன்னேன்றிரமா னசீடனுக் குயிருஞ்சொனமேனன், வைப்பானவைப்புக்குகைபாகஞ்சொ ன்னேன் மகத்தானமுப்பூவின் மறைப்பைச் சொல்வேன் அப்பானஅப் பிஹுப்புகல்லுப்புதான அப்பனே நாதமென்றாற் பூநீறுமே. ௩௱௬

பூநீறுஞ்சத்தியுப்புகல்லுப்பின்பேர் புலத்தியனேசிவமென்டார்பர த்தைக்கேளு, பூநீறுமதம்கடியில் அண்டம்போலப்பூமியிலேதானிருக் கும்தெரிக்திடாதோ, பூநீறும்அண்டமென்றால் சுக்கான்கல்லுபுலத்திய னே பேருலகம் புகழுங்கல்லு பூநீறுங்கல்லுப்பாஞ்சுண்ணம்புகல்லுகூ ட்டிவிட்டுநாககருப்பேயனென்றுசொல்லே ௩௱௭

சொல்லப்பாபரத்திலிட உப்பிதப்பா சுகமாகமூன்றுமொன்றாய்ச் சுண்ணபானுல், அல்லப்பா ஆதாரந்தன்னில்மூணு அப்பனேயதைச்சே ர்க்கில் உயிருண்டாகும், வல்லென்றபெரியோரும் யோகியோரும்வாழ்ந் திருப்பாரிதைதானேபூசைசெய்துகல்லென்றகலைக்கருகேயிருப்பார்சொ ன்னுல் காணரிதுகண்டவர்கள்கோடிக்கொன்றே. ௩௱௮

## வெள்ளைக்குச் சூரணம்.

ஒன்றாகஇன்னமொரு சூரணங்கேள் உத்தமனேசந்தனமும்அதிற் கட்டைபேலம், நன்றாகலவங்கப்பட்டை கிறாம்புசோம்பு நன்மைபதிம துரங்கார்போகவித்து, சென்றதோர்வெட்பாலை தேற்றான்வித்துதிறமா ன அருகம்வேர்சிற்றாமுட்டி பன்றானவேருடனே பன்னிரண்டும் பால கனே வகைக்குஅரைப்பலமாய்வாங்கே. ௩௱௯

வாங்கியே வெயிலுலர்த்திச் சூரணமேசெய்து வண்மையுடனந்தி
டைக்குகற்கண்டுகூட்டி, தேங்கியேவொருகடிதான் அந்திசந்தி திறமான
பசுவெண்ணைமண்டலமேகொள்ள ஓங்கியே ஓடுகிறவெள்ளைதீரும் உத்
தமனே நீரெறிப்புஉடனேதீரும், பாங்குடனேபத்தியமோகாரமாகா ப
ரிவானபுளத்தியனேபாகமாமே. ௩௱௰

இஞ்சிச்சூரணம்,

பாகமாயின்னமொருசூரணங்கேள் பாங்கானஇஞ்சிபலம்பத்துவா
ங்கி, சோகமாய்த்தோல்போக்கி வில்லையாச்கி சுத்தமாய் பொன்வறுப்
பாய் பசுநெய்யாலே, ஏகமாய்ப் பொடிசெய்துவைத்துக்கொண்டு ஏல
மொடுதிரிகடுகு கிராம்புஓமம், தாகமாய்வாலுழுவைச்சாதிக்காயுந்தரு
வான ஆனைத்திப்பிலிசீரகமாமே ௩௱௧௧

ஆமப்பா அதிமதுரங்குரோசாணிஓமம் அமுக்கிறாகசகசாலவங்க
ப்பத்திரி, காமப்பாமோடியுடக்கொத்தமல்லி நலமானபேரீச்சு முந்திரி
கைஓக்க தாமப்பாவகைக்குக் காம்பலமேவாங்கித் தருவான இளவறுப்
பாய் சூரணமேசெய்து, ஓமப்பாசீனிபலம்பத்துங்கூட்டிஉத்தமனேமூ
ன்றுமொன்றாய் விரவிக்கொள்ளே. ௩௱௧௨

விரவியேவொருகடிதான்அந்திசந்தி விவரமுடன்மண்டலமேகொ
ண்டாயானால், பரவியேமந்தமுட அக்கினியமந்தம் பாங்கான ஊஷ்ண
த்தின்வாயுவுங்கூடக், கரவியேபித்தமொடு பித்தவாய்வுங்காணுதே ஓடு
மடா தீபனமுண்டாகும், பிரவியென்றவாதமெல்லா மொடுக்கிநல்ல பி
லமூண்டாமின்னமொரு விவரங்கேளே. ௩௱௧௩

கிராட்சசூரணம்.

கேளே நீ முந்திரிகைபேரீச்சோடு கிருமையுள்ளதக்கோலமதுர
முத்தம், வாளேநீகொத்தமல்லி அல்லிக்கிழங்கும் வகையான சாதிக்கா
ய்லவங்கஞ்சுக்கு, ஆளேநீநன்னாறி லவங்கப்பத்திரி அப்பனேதாளிசம்
திப்பிலிவிலாமிச்சு, பாளேநீ சிறுநாவற்பூ லவங்கப்பட்டை பாங்கானச
ந்தனமு மூங்கிலுப்பே. ௩௱௧௪

உப்பானநெல்லிவிதை நெற்பொரியுமொக்க வுததமனே வகைக்கு
ஒரு பலமாய்வாங்கி, செப்பாமல் சூரணித்து சமனிடைதான் சீனிசேர்
த்துமே வெருகடிதான்அந்திசந்தி, ஓப்பாககாலைசும்மா மண்டலந்தான்உ
த்தமனேபசுநெய்யில்மாலையிலுண்ணத், தப்பாதபத்தியமோ இல்லையப்
பா தருவானவியாதிதனைச் சாற்றக்கேளே. ௩௱௧௫

சாற்றக்கேள் பயித்தியமும் பாண்டுசோகைத் தருவான பித்த
மொடு மிரத்தபித்தம், போற்றியோகாமாலை தாகசுரமும்வாங்கிபோம

டா சயித்தியமும்தீர்ந்துபோகும், வாழ்க்தக்கேளின்னமொரு சூரண
ந்தான் மைந்தனேதிரிகடுகுமோடிகோஷ்டந், தோற்றியதோர்நெல்லிக்
காய்சந்தனமுமாஞ்சில் சுகமானதாலிசைகிராம்புசீரகமே, ௫௧௬

மந்தவாயுவுக்குச்சூரணம்.

சீரகமுமேலமொடு பச்சைகர்ப்பூரந் திறமாகச்சூரணித்துச்சீனிச
மன்கூட்டி, காரணமாய்வெருகடிதான அந்திசந்தி கனமாக உண்டிட
வேபுத்தமெல்லாம் பேரணியாய்நின்றதொரு ரத்தபித்தம் பிலமாக
வேரிபித்தம் அரோசிகம்வாந்தி, காரணியில்கில்லாது,பத்தியமோ இல்
லை தருவாக இருபதுநாள்கொண்டுதேறே. ௫௧௭

வாந்திபேதிக் குச்சூரணம்.

தேறவேயின்னமொரு சூரணங்கேள் திரமான எட்டியுட வட
வேர்வாங்கி,கூறவேமேல்தே லைப் பழச்சாற்றுலாட்டி குணமாகரவியு
லர்த்திச்சூரணமேசெய்து, மீறவேபதனமதாய் வைத்துக்கொண்டுமே
ன்மையுடன் புரமெரித்தார் தும்பைரெண்டும், ஏறவேகியாழமிட்டுச்
சூரணந்தான் இன்பமுடன்கடலையிடை யிட்டுக்கொள்ளே, ௫௧௮

கொள்ளவேயுகபேதிதீருமப்பா குணமாகமீறியதுபேதியானால்,வி
ள்ளவேமறுபடியுங் கிஷாயத்தில்தாக்குமீறுகிறவாந்தியொடுபேதிவரும்
உள்ளவேகாதடைப்பு சங்கிவேர்வை உத்தமனேதீருமடாமூன்றுவிசை
யீய, வன்னவே வறுத்தரிசிகஞ்சிகொள்ளு மைந்தனேஊழியதுபறக்கு
ம்பாரே. ௫௧௯

பறங்கிப்பட்டைச்சூரணம்.

பாரப்பாஇன்னமொருசூரணங்கேள் பறங்கியுடபட்டையொடுஅழுக்கு
ருவும், நேரப்பாசெங்கத்தாரிவெம்பாடப்பட்டைதினைவாகத்திப்பிலியு
ஞ்சித்திரமூலம், சாரப்பா சமனிடையாகச் சூரணித்துசமர்த்தாக ஆவி
ன்பாற்பிட்டுவைத்து, காரப்பாபசுநெய்யில் வெருகடிதானுண்ணகா
ணுதுசூலைபுண்ணுப்பாகாதே. ௫௨௰

கருஞ்சூரைச்சூரணம.

உப்பாகாதா தின்னமொருசூரணங்கேள் உத்தமனேகருஞ்சூரை
சித்திரைமூலஞ், செப்பாதவெள்ளருகு மிளகரணைமிளகுஞ் சிறுகுறிஞ்
சா*ஞுகாசக்கிழங்குகருவேலும், உப்பானஉழுலைத்தி வேருபட்டைஒன்
பதுமேசரியிடையாய்ச்சூரணித்து, அப்பாநீமுன்போலே பாலிலிட்டு
அவித்திடவசுத்தியதாம் பின்புகேளே. ௫௨௧

* ஆகாசகிழங்கு ஆகாசகருடகிழங்கு

காட்டுக்கரணைச் சூரணம்.

கேளேநீவெருகடிதானிரண்டுவேளை இருபையுடன்பசுநெய்யில்தி
ருநோய்கேள், பாளேநீகடிவிஷமும் குஷ்டரோகம் பாங்கானகருங்காறு
பாண்கிரந்திசூலை,ஆளேநீபுண்களொல்லாந்தீருமப்பா அப்பனேவறுத்தவு
ப்பு துவரையாகும், வாளேநீயின்னமொரு சூரணங்கேள்மைந்தனேபே
ய்கரணை கழஞ்சுபதினறே. ௧௨௨

பதியானசுக்குமே சழஞ்சுநாலுபாலகனேகொடிவேலிகழஞ்சுரண்
டு, விதியானமிளகிரண்டு சூரணமேசெய்து மீறுமல்மூன்று சுண்டைக்
காய்வீதந்தான், சுதியாக வேழுநாள்அந்தி சந்திசாதகமா யெள்ளெண்
ணெய் குழைத்துத்தின்ன, குதியானமூலமுளை மூலரோகங்குண மாகு
ம்பத்தியமும்புளியாகாதே. ௧௨௩

சிந்திச்சூரணம்,

ஆகாதுயின்னமொரு சூரணங்கேள் அப்பனேசிந்தியுட சூரணத்
தை, வாகானசுத்தகங்கை தன்னில்சுத்திமைந்தனேமூவேழுதாமே செ
ய்து, பாகாகஉலர்த்திபதை பால்விட்டுப்பிசரி பாலகனேகாயவைத்துப
லம்பத்தப்பா, ரோகக்கரிசாலை சூரணங்கூட்டிநினைவாகப் *பூநாகப்பூ
ச்சிதன்னை. ௧௨௪

* பூநாகப்பூச்சி-நாகப்பூச்சி

தன்னையேபாலிலிடமண்ணெல்லாங்கக்குந்தருவாகப்பின்புலர்த்தி
ச்சூரணமேசெய்து,ஒண்ணுமேபலமூன்றுஇடையுங்கூட்டிஉத்தமனே
மூன்றுவிசை பொடித்துவடிகட்டி நிண்ணயமாய்வொருகடிதான் நெய்
யிற்கொள்ள நிலையாதமேகமொடுகவிசையிளை, சொன்னமேகாசமெட்டு
இளைப்புசயரோகந்தொலையாத*கிரிச்சினமும் அண்டவாயுவே. ()

* கிரிச்சினம்-அற்பம்

வாயுவென்றவாதமொடு வறட்சிபித்தம்வகையாகத்திருமடாதேனி
ற்கொள்ள. தோயுவென்றகர்மநோய் நாசிப்புண்கள்தொலையாதபீனசமு
ந்தொலைந்துபோகும், பாயுமென்றசர்க்கரையிற்கொண்டல்மைந்தாபாங்
கானமயிர்வெட்டும் புழுவெட்டோடுங், காயவென்றகாற் பிலமுங் கண்
தெளிவுமுண்டாங் கருவாகப்புளிப்புகையுந் தவிர்க்கச்சொல்லே. ()

வாதசுரத்துக்குக் கியாழம்.

சொல்லவேகியாழமொன்று விபரமாய்க்கேள் சுகமானபற் டாடந்
சிந்தில்முக்தம், அல்லவேமலைதாங்கி கண்டங்கத்திரி அப்பனேசெம்மு
ள்ளி முன்னைசுக்கு, நல்லவேவகைக்கிரண்டு கழஞ்சுகூட்டிநாழிநீரெட்
டொன்றாய் மூன்றுநாளும், வெல்லவேயிருவேளைகுடிக்கும்போதுமீண்
டுவரும்வாதசுரம்விட்டுப்போமே. ௧௨௭

வீட்டுப் போம்வாதசுரந் தனக்குக்கேளு விதமானசுக்கு முள்ளிக
ண்டங்கத்திரி. வெட்டிப்போய்பெருமல்லிசிற்றுமல்லிவேருடனேவகை
வீதங் கழஞ்சுரண்டு, தட்டிப்போம்நாழிநீர்நாழியாககாய்ச்சி வடித்த
தில்உழக்கு வறுத்தரிசியிட்டு, கெட்டியில்லாக்கஞ்சுபோல்காய்ச்சி கொ
ள்ளக்கொடியானவாதசுரம் கிளரிப்போமே, ௩௨௮

பித்தசுரத்திற்கு கியாழம்-கஞ்சி.

கிளரிப்போந்தூதுவளை வேரினேடு கிருஷையுள்ளசீந்தி சுக்குமது
ரமாஞ்சி, அளரிபோம்பயறுமுத்தஞ் சிற்றுமுட்டி அப்பனேமுன் போ
லே கியாழங்கொள்ள, உளரிப்போம்பித்தசுரங்கஞ்சிசேளு உத்தமனே
வில்வவேர் மதுரஞ்சுக்கு, மூளரிப்போ மிலுப்பைவேர்சிற்றுமுட்டி மு
ன்போலக்கஞ்சிகொள்ள முறைமையாமே. ௩௨௯

சேத்துமசுரத்துக்குகியாழம்-கஞ்சி,

முறைமையென்றதூதுவளை கண்டங்கத்திரி முயன்றதொரு செம்
முள்ளிசுண்டைவேரும் வறுமையென்றசுக்குடனேகியாழம் பண்ணிவ
கையானதிப்பிலித்தூள் போட்டருந்த, அருமையென்றசேத்துமத்தின்
சுரமுந்தீரும் அப்பனேகஞ்சிவகை பாதரியும்வில்வம், உரிமை யென்ற
பெருங்குமிழம் வேரில்முன்போல் உத்தமனேகஞ்சியிடசேத்துமசுரம்
போமே. ௩௩௰

குளிர்சுரத்துக்குக்கியாழம்.

போமப்பாசீரகமுங் * குறுந்தொட்டிவேரும்புண்ணியனேகியாழ
மிட குளிர்தரங்கள், ஆமப்பாவிஷசுரமும் போகும் போகும் அப்பனே
வெள்ளுள்ளிவசம்புமஞ்சள், காமடாகோடிவேலி யிந்துப்போடுசாரணை
வேர்முருங்கைவேர் கியாழங்கொள்ள போமப்பாவாயுவினிடவயிற்றுவ
லிதீருமபுலத்தியனேயின்னமொருகியாழங்கேளே. ௩௩௧

* குறுந்தொட்டி-பூனைக்காஞ்சொறி

சந்நிசூத வாயுவுக்கு,

கியாழமென்றதூதுவளை கண்டங்கத்திரி கிருஷையுடன்முட்காவே
ளைசுக்குமொன்றாய், கியாழமிட்டுத்திப்பிலித்தூள் தூவிக் கொள்ள கிரு
ஷையுள்ளசந்நியுட சூதகத்தின், கியாழத்தில்வாய்வுடனேவலிப்பு. தீருங்
கிருஷையுடன்நெல்லிர்க்குகருவெம்பீர்க்கு, கியாழமுடனருகம்வேர்பிடி
தானென்றுகிருஷையுடன்மூன்றறுப்பாய்அரிந்துபோடே, ௩௩௨

போட்டினன்மிளகுகொஞ்சம் உடைத்துப் போட்டுப் புண்ணிய
னேதான்வறுத்துஅரக்கிப்போட்டு,நாட்டியேஅருகம்வேர்க்கறுப்போ
க்கிப்போட்டுநன்மையுடனிளவறுப்பாய்வறுத்துத்தண்ணீர்காட்டிடுவா
ய்ஒருபடிநீர் விட்டுப்பின்பு சணக்காக்கிராம்புஐந்துவறுத்துப்போட்டு
தாட்டிகமாயெட்டொன்றாயிருத்துக்கொண்டு தருவான பாக்களவு வெ
ணணெய்போடே, ௩௩௩

மூலக்கியாழம் இரசவேக்காட்டுக் கியாழம்.

வெண்ணெயிட்டுஉள்ளுக்குக்கொடுத்தாயானால் வியாதியதுதீருகிறவிதந்தான்கேளு, தண்மையுடன்கர்ப்பஸ்ரீசூடுகாங்கைசலக்கட்டியலக்கட்டுந்தீருமப்பா, வண்மையுடன்விலாமிசைலவங்கப்பட்டைமாமனுசள்கியாழமிடமூலந்தீரும், நண்ணயமாய்க்கருவேலிவெள்வேலம்பட்டைநலமானதுளசிவேர் எருக்கம்வேர்தான். ௩௩௪

தானென்றாய்க் கியாழமிட்டுக்கொப்பளிக்க தருவான ரசத்ினுடவேக்காடாறு நானன்றாய்ச்சோதித்துப்பார்த்தேனப்பாநாய்க்கூலே வாய்ச்சூலைபிரணமுந்தீருந், தானன்றாய்ச் செய்துஇதைக்கொப்பளிக்கத் தருவானதந்தமெல்லா மிறுகுமப்பா,வானென்றசுந்தகத்தைப்பசுவெண்ணெயிட்டுமைந்தனேதானரைத்து துணியிர்பூசே. ௩௩௫

பூசியேஉருட்டியதைக் கதிரில்கோத்துப்புலத்திரனேதீப்கொளுத்தியெரியும்போது ஆசியேஅடியிலே பீங்கான்வைக்க அப்பனே சுடர்த்தயில மிரங்கும்பாரு, தேசிகனேபதனமாய்வைத்துக்கொண்டுதிறமாக மூனறு துளிமூக்கிலூற்ற, தூகனத்தால்மூக்கறுக்கவந்தநோய்தான் துலைந்துவிடுபத்துநாளூற்றும்போதே. ௩௩௬

ஊற்றுதேபோனுக்கால்நோய்தீராதுஉத்தமனே யெளியோரைப்பெரியோர்தன்னை, சாற்றியேகற்புடைய மங்கையோரைத்தருவாகமொக்கை குலத்ததினாலப்பா, தேற்றியதோர் அரசர்களைப்பழித்தாரானால்சீக்கிரத்தில்மூக்கறுத்துக்காதுங்கொய்வார், பார்த்திருந்துயோகிகளை பழித்ததோஷம்பாவமதால் மூக்கறுக்கும்பழவினையாம்பாரே. ௩௩௭

நசியம்,

பழவினைகாந்தீராதுபாவிமார்க்கு பரிவானபுலத்தியனேமருந்தியாதே * உழவினையாடோடிக்கொல்லாமட்டும் உலுக்தருக்குத்திராதுஉறுதிசொன்னேன், கழவினையுந்தானகற்றபெரியோருக்குக்கால் பிடித்துஏவல்செய்துகாத்திருந்தால், பழவினையுங்கானகலுமருந்து கேளு பாங்கானநிம்மளண்ணைப் படியளாக்கால்வாங்கே. ௩௩௮

* ஊழ்வினை எதுகைநோக்கி உழவினையெனமருவியது,

ஏரங்கியதில்திரிகடுகு தான்றிக்காயும்மைந்தனேமிளகோடு கஸ்தூரிமஞ்சள், தாங்கிநின்றகார்கோலும் வேப்பமுத்துத் தருவாகக் கழஞ்சியரைப்பொடித்துப்போட்டு, தேங்கிநின்றரவிப்புடந்தானேமூநாள்வைத்திரும்பவகைவாசலிலே வைத்துமைந்தா, ஓங்கிநின்றஇரவிதனைநமஸ்கரித்துஉத்தமனே மூன்றுதுளிமூக்கிலூற்றே. ௩௩௯

மூக்கிலேமூ ன்றுநாள் விட்டாயானால் முழுவினைபால் வந்ததொரு பீநசமேதீரும், மூக்கிலேசாரணையுங் கிழங்கிந்துப்பு மிளகுடனே சீனி வகை கழஞ்சுரண்டு, மூக்கிலேமுலைப்பாலா லரைத்துசெய்யில் மூன்று நாள்ரவியிலிட்டு, மூக்கிலேநீர்ப்பாய்ச்சல் பீநசமேதிரும முறையாக இ ன்னமொருதிரிதான்கேளே, ௩௪௰

பீநசத்துக்குத்திரி,

திரியென்னபூவரசம் வெள்ளெருக்கின்வேரும் திறமானமலைதாங்கி கஸ்தூரிமஞ்ஞள், உரமானசிறுநாகம் வெடியுப்பும் புழுகும்உத்தமனே புகையிலைச்சார்விட்டுஆட்டி, திறமாகச்சீலையிலே புரட்டிக்கொண்டு தி ர்க்கமாயனற்கொளுத்தி நாசிக்கேற்ற, பரமானபீநசமும் புருவுங்கூட பாலகனேதீர்ந்துவிடும் பாகங்கேளே. ௩௪௪

சிரசுநோய்பீநசம் சிரச்சூலைக்குத்தயிலம்,

கேளப்பா நெல்லிக்காய்சாறுநாழி கிருபையுடன்கரிசாலைச்சாறுநா ழி, ஆளப்பாபசுவின்பால் எள்ளெண்ணைநாழி அதிமரம் பலமரைத்து க் கலக்கிக்காய்ச்சி,வேலப்பாதலைமுழுக சிரசிலுள்ள நோய்கள்விலகும டா பீநசமுஞ்சிரசிற்சூடும், ஏலப்பாபறந்திடுங் கணதெளிவுமாகும் இ ன்பமுட னின்னமொரு தயலங்கேளே, ௩௪௨

கபாலசூலைக்கு சவுரித்தயிலம்,

கேளப்பா சவுரியிடப் பழச்சாறுநாழி கிருபையுடன் பொடுதலை யின்சாறுநாழி வேளப்பாபசுவினிட பால்தானுழி விதமானமிளகுபலம் நல்லெண்ணைநாழி, தாளப்பாகலக்கியதை மெழுகுபோல தான்வடித்த எண்ணைதனைமுடிக்கும்போது, கோளப்பாவொன்றுமில்லைமிளகுநீருங் கூட்டியேசாகமுண்ணுபோகம்நீக்கே ௩௪௩

நீக்கவே தீருகிறவியாதிகேளு நிலையானகபாலவலி கபாலக்குத்து போக்கும்பீநசங்கள் மண்டைசூலை பொல்லாத நேத்திரத்தின்மாசிதீ ரும் வாக்குமேநீர்கடுப்பு மேகச்சூடும்வாய்க்குமடாதைலமது வாரந்தோ றும், தாக்குமேதவறுமல் மூழ்கிவாநீ தன்மையுள்ள நோய்களெல்லாந் தவறிப்போமே. ௩௪௪

சிவயோகி.கற்பம்,

தவறிப்போஞ் சிவயோகம் செய்வோர்க்கெல்லாந் தண்டையுள்ள எள்ளெண்ணைநீக்கிமைந்தா.சவரிச்சார் பொடுதலைச்சார் பசுவின்பாலு ஞ் சமன்கூட்டிகுளகிட்டுக் காய்ச்சிமூழக தவறிப்போமுன்சொன்னவி யாதிதீருந் தன்மையுடன் சிவயோகங் கேளுமைந்தா, அவமானஞ்சொ ல்லுகிறேன் மூலவன்னி அப்பனேசாந்தியடாசெந்திதானே. ௩௪௫

செந்தியென்ற உந்தியிலே மைந்தா கேளுசிவசிவா கங்கைசிவகங்கை யுண்டு, சொந்தமுடனந்ததிலே யடுத்துக்கொண்டு சுத்தமுள்ள கங்கைத னை சுகமாய்நீயும், அநதிசந்தி கொண்டதனுல் அய்யா கேளுஆகாரமான சிவ மூலாதாரம், எந்தவிதமென்றறிந்து சொல்லப்போறேன் ஏகநிராம யமான மூலந்தானே. ருசசு

ஆகார உகார தீட்சை பூரணமகிமை.

தானென்றஆகாரமூலம்பார்க்கச் சாதகத்தைச்சொல்லுகிறேன்நன் றாய்க்கேளு, கோமென்றகுருவருளா லகாரதீட்சைசொண்டபின்புஉகா ரமடா சத்திதீட்சை, வானென்றமவுனமடா மகாரதீட்சை மார்க்கமுட னுருவறிந்து தீட்சைபெற்றால், தேனென்ற அமிர்தகற்பத்தாலேதிடமி ல்லாக்காயமது சித்திதானே, ருசள

தானென்றசித்தியதுயோகமார்க்கந் தனையறிந்த மூணமடாபிரமஞா னம், வானென்றஞானமடா கேசரியின்றீயம்மௌனத்திலாளதுவுமூலத் தீய்தான், ஓனென்றதீயதுதான் உந்தியுந்தி ஓமூடிந்த ஆவியடாபிரண யந்தான் தேனென்றநாதமா சிலம்பினோசை திக்கடங்காஓசையைநீ செ வியிற்கேளே, ருசஅ

செவியானஆகாசமோசைமைந்தா தீர்க்கமென்ற மூலமதில்நாவி தன்னால், தவியாதவாசியடா மேகமாச்சு சங்கையுள்ளமேகமதுரவியினா வி, குவியாதரவியுடனே மேகஞ்சேர்த்து குமுறலி சத்தமாய்ச்சலமு மாச்சு, அவியாதமேகசலந் தன்னால்மைந்தா அண்டசராசரங்களெல்லா முயிருண்டாச்சே, ருசகூ

உண்டானசோதியப்பா புலத்தியனேகேளுஉரைத்துவிட்டபூரண மாய்நாநூற்றுள்ளே, கண்டாயேபூரணமும்நாலுநூற்றில்கண்டெடுத்து சொன்னபொருளிந்தநூல்தான், விண்டனடாஅதில்சொன்னகருக்களெ ல்லாம் வேதாந்தயோகியர்க்கு விளக்கமாகும், பண்டுபோலிதிற்கருக்கள் தெளிவாய்ச்சொன்னேன் பதனமப்பா இன்னமொருதயிலங்கேளே. ()

கந்தகத்தயிலம்.

தயிலங்கேள் கந்தகமும் வெடியுப்புச்சீலையுங் கருவாகப்பலமொன் றுபொடிக்கும்போது, அயிலமென்றநவாச்சாரம் வீரந்தானு மப்பனே யாரைக்கழஞ்சு கூடப்போட்டு, ஒயிலாகப்பலம்நாலு பசுவின் வெண்ணை உத்தமனே கல்வத்திலிட்டு ஆட்டி, தயிலமப்பாமுன்போலச்சுடர்த்தயி லம்வாங்கித் தருவானபீங்கானிற் பதனம்பண்ணே. ருருக

பண்ணியே பணவிடைதானந்திசந்திபத்துநாள் சர்க்கரையிற்கொ
ள்ளும்போது, உண்ணவேபத்தியமோ இல்லேகண்டாய் உத்தமனேநீங்
குகிற வியாதிகேளு, நண்ணவே குஷ்டம்சொறி விரணம்வெள்ளை நல்மா
னகருமேகம் வாதவாய்வு திண்ணமேக்ஷயரோகங்குன்மவலிகூடத்திரு
மடா இன்னமொருசெய்திகேளே. ௫௫௨

மூதண்டக்கியாழம்.

செய்தியென்னசூடுகொண்டால் மருந்திருலே தீருதற்கு அறுகம்
வேர்பலம்பத்தப்பா நைதுமேயதிமதுரங் கூகைநீறும் நலமானமாதள
ம்பூமிளகினேடு, எய்துமேபலமரைதான் கூடப்போட்டு என்மகனேஅ
றுபடிநீரெட்டொன்றாக்கி, கொய்துமே காற்படிநீர் பாக்களவுவெண்ணே
கூட்டியேமூணுநாள் காலமேகொள்ள. ௫௫௩

சன்னிக்குத்தயிலம்.

கொள்ளவேவீறுடனே கடுப்பும்போகும்குணமானசந்நியிடதயில
ங்கேளு, விள்ளவேமாவிலிங்கம் புனல் முருங்கக்காயும் விளாவின்வேர்
நொச்சிவே ரெருக்கன்வேரும்,கள்ளவேசொன்ன, கடைவாதமடக்கக்கரு
வானபட்டைபலமாறேடொக்க,வள்ளலேபலமிரண்டுயெயில்பிலிதானும்
வண்மையுடன் எட்டியிட குறுணியாமே. ௫௫௪

குறுணியாயித்தனையு மிடித்துப்பாண்டங் கூட்டியே வேப்பெண்
ணைபுங்கினெண்ணை, கருணமாயெள்ளெண்ணைபடியளையாய் வார்த்துத்
தயவாகத்தான்பிசறி மேலோமூடி, அருணமாய்ச்சீலேமணவலுவாய்ச்
செய்து அப்பனேயடியிலே தமருதான்போட்டு, வருணவாய்க்குழிவெ
ட்டிப் பல்லாய்வைத்துமைந்தனேபல்லாவாய்ப் பானைத்தூரே. ௫௫௫

தூரெல்லாம்மண்பூசிப் புகைபோகாமல் தூரிதமுடன் சாணமேற்
றிச் சுத்திகேளு பாரெல்லாந்தானெரியக் கனற்மாய்ப்போட்டுபாங்கான
கலயத்தில் தயிலம்வீழும், நேரானகுழித்தயிலம் பதனம்பண்ணி நினை
வாக மேல்பூசிப் பிடித்துவரும்போது, பாரெல்லாஞ்சந்நியொடுவலிப்பு
சிப்பு பாங்கானமுடக்கம்பாரிசவாயு. ௫௫௬

காதுமந்தத்துக்குச் சிரசில்தேய்க்கற்றயிலம்,

வாயுவெல்லாம்போகுமடா தயிலந்தன்னில் வண்மை யுடன்காது
கேளாமற்போனால், நேயுவென்ற நல்லெண்ணை படிகால் தன்னில் நில
ப்பனையுங் காற்பலந்தான் பொடித்துக் காய்ச்சி, பாயுவென்ற பாதமிர
ண்டடியில் தேய்நீ, பதனமாய்ப்பக்குவமாய் மண்டலந்தான் ஓயுவென்

றநல்லெண்ணெ யடிகாலுக்கு ளுத்தமனே கொடீவேலிப்பட்டைபலங்
காலே. ௩௫௭

காதுக்குத்திரைச்சலுக்குத்தயிலம்

காலப்பா முலைப்பால்விட்டரைத்துக்காய்ச்சிக் கனமாகத் தினங்
கொஞ்சம் சிரசில்தேய்த்து, மேலப்பா மணடலமிப்படி ரண்டெண்ணெ
மேன்மையுடன்றான்றேய்க்கக்காதுமந்தம் பால் போலேதீர்த்துபோகு
ங்குத்திரைச்சலுக்குப்பாங்கானகொள்ளிக்காய்கொழுஞ்சிவேரும்நாளப்
பாசழுஞ்சுமேல் தோலரைத்து நன்மையுடன் முலைப்பாலால்நன்றாயா
ட்டே, ௩௫௮

ஆட்டியேகாற்படிநல் லெண்ணெய்தன்னில் அன்பாகக்காய்ச்சிய
தி லஞ்சிதுளிவிட்டு, பாட்டியேகாதுக்குள் பஞ்சடைத்துவைக்கப்பரு
வாகக்காதிரைச்சல், காதுகுத்தல்ஒட்டியேகாதுநோய் போகும்ப்பாஉத்
தமனேபல்வலிக்குமறுபாகத்தில். நாட்டியேதைவேளை யறுகம்புல்லும்
நலமாகத்தட்டியதைக்கசக்கிக்கேளே. ௩௫௯

அறுகம்வேர்த்தயிலம்;

கசக்கியேமறுபாகங் காதில்தானும் கடுகவேமூணுதுளி விட்டாற்
போகும், நசிக்கிடவேமுகவாதங் தந்தரோகம் நன்மையில்லா ஒருதலை
வலியும்போகும், பசக்கியேயின்னமொரு தயிலங்கேளு பாங்கான அ
றுகம்வேர்பலம்பத்தப்பா, கொசக்கியேமானத்தில்குறுணிநீர்தான் சு
கமாகஎட்டொன்று யிறுத்துக்கொள்ளே. ௩௬௰

இறுத்துநீயெள்ளெண்ணெய்படிதான்கூட்டி என்மகனேவெட்டி
வேர் கார்கோல்வித்து, நெருக்கியேகோஷ்டமுடன் சழுஞ்சுவிதம்வெக
வரைத்துத்தயிலமதை நீரில்லாமல், கருத்தாகக்காய்ச்சியதை முழுகும்
போது கனசனத்தமண்டபமிடி. சிரசில்பித்தம், வருக்கமுள்ளமஞ்சள்நீர
த்தமூத்திரம் மகத்தானமேகநோய் தணிந்துபோமே, ௩௬௧

பேர்மப்பாஉஷ்ணங்கள் நேதரவாயு பொல்லாதசயித்தியமும் பயி
த்தியமுங்கூட, நாமப்பாமூதண்ட தயிலங்கண்டால்நன்மையில்லாநோ
ய்களெல்லாம் நாடாதப்பா, தாமப்பாபித்தமென்றவியாதிபோகும் தய
வானசந்நதி யிதற்கொவ்வாது, வேமப்பாவிஷங்களுக்குக்குழம்புகே
ளு வேப்பமுத்துராசங்கெந்தி துருசுவெள்ளை, ௩௬௨

விஷங்களுக்குக் குழம்பு.

வெள்ளையொடுமனேசிலையும் பெருங்காயமேழு மேன்மையாய்வ
கைக்கு அரைக்கழஞ்சுகூட்டி, கல்லையென்றநோவாளஞ் சுத்திசெய்து

தருவாகக்கழஞ்சதுவு மேழுமென்றாய், வள்ளலேகல்வத்திட்டெருக்கம் பாலால் மாட்டியரைஒருசாமமெழுகுபோலே, துள்ளவேபினபு * நிம்ப நெய்தான்விட்டுக் குருசாகவொருசாம மரைத்துக்கேளே, ௩௬௩

* நிம்பநெய்-வேப்பநெய்,

அரைத்துமதைக்கொம்புசிமிழ் தன்னில்வைத்து அப்பனேவிஷந் தீண்டி வந்தபேர்க்கு. திரத்துடனேபயிறளவு வெற்றிலேயிலீய்ந்துதீர்க் கமுடன்கடிவாயிற் கொஞ்சம்பூச, பறந்துவிடுஞ்சகல விஷம்போகுமெ ன்று பாடினதுவடமொழிநூல் பாகமப்பா,உரைத்துவிட்டேன்பத்தியந் தான்பசுமோராகும்உத்தமனேசந்நிக்குக்கலிக்கங்கேளே, ௩௬௪

சந்நிக்குக் கலிக்கம்.

கேளப்பாமருக்கரைப் பழத்தைதீயுங்கிருபையுடனுடைத்து அதி ன் விரையில்தானும், பாளப்பாபிசினிருக்கும் வாங்கிக்கொள்ளுபாலக னேவிரையெல்லாம் நீக்கிப்போடு, தாளப்பாபயறுபோ லுருட்டிக்கொ ண்டு தருவாகவெள்ளைச்சா ரணைவேளையோடு, கேளப்பா வெற்றிலேயு ங்கசக்கிச்சாற்றில் கிருபையுடன்தானரைத்துவிழியிற்போடே. ௩௬௫

ஆக்கிராணநசியம்.

போடவேசந்நியொடு பிடரிநோயும் பொல்லாதவுடம்புநோய் நீ றேற்றங்கள், சாடவேஓடிப்போ மின்னமொன்று சாற்றுகிறேனுக்கிரா ணந்தயவாய்க்கேளு, நாடவேகாட்டெருவில் எருக்கம்பாலே நாளாறுவி னையடித்துக காயப்போட்டு, தேடவேபுடம்போட்டுச் சாம்பல்தன்னை த் திறமாகநாசியிலே ஏற்றுவாயே. ௩௬௬

கண்வியாதிக்கு மருந்து.

ஏற்றவேசலதோஷ மண்டைக்குத்து ஏற்றமென்றநீரேற்றமெல் லாம்போகும், பார்த்திபனேகண்ணிலுள்ள வியாதிபோகப் பாடுகிறே ன் () சம்பழத்தில் நூற்றெட்டு, மேதாற்றுமல்துளைதுளைத்து லவுங்கநா ட்டித் துரிதமுடன்கயிர்கோத்துச் சட்டியிலேதாக்கிப், பார்த்தாலேவி ளாக்காய்போ ல்பசுவின்வெண்ணெய் பாலகனேலவங்கமெல்லாம் பரப் பிமூடே. ௩௬௭

() சம்பழம்-எலுமிச்சம்பழம்,

மூடியேபச்சட்டி தனில்படாமல் மூர்க்கமுடன்சுத்தகங்கை விட் டுவைநீ, நாடியே நாற்பதுநாள் வேறேவேறே நலமான சுத்தகங்கை விட்டுவைத்து, தேடியேபிறகுவெண்ணெய் தனையெடுத்துத் திறமான

தாம்பரத்தின் பரணிலேவைத்து, சாடியே மூமுடனே லவக்கப்பூவுந்த ள்ளிவிடுவெண்ணெய்தனைக் கண்ணில்தீற்றே. ௩௬௮

தீற்றிடவேசலம்விழு பெரிபபுண்டாகுந் திறமாகச்சீலேயி னூற்று டைக்கநிற்கும், மாற்றிடவேமண்டலந்தான் கண்ணில்தீற்றமாறுதநேத் திரநோய் மாறுமென்றும், போற்றிடவேயென்குருவேதியர்தானிந்தப் பு த்தகத்தின்பெருமையினூற் புகன்றதோடா, தோற்றிடாவுலகத்தி லெளி யோருண்டு துரையான துரைமக்களரசருண்டே. ௩௬௯

வயித்திய தருமம்.

அரசரென்றால்பொருள்கொடுத்து நோய்தீர்த்துக்கொள்வாரதனு லேயுந்தனுக்குத் தருமமில்லே, நீசரென்று லெளி யோர்க்கு வயித்தியஞ் செய்ய நிலையானதருமமது நிலைக்குமென்று, பிரியமுடனென்குருவேதி யர்தான்சொன்னார் பிள்ளையென்றுபுலத்தியனே யுனக்குச்சொன்னேன், பரிசனமாய்மனதில்வைத்தால் முத்திசேர்வாய் பாலகனேயிதை மறந்தா ல் பலித்திடாதே. ௩௭௦

பலித்திடவேவேணுமென்றால் புலத்தியனேஐயா பாரிலுள்ளவுயி ரெல்லாந் தன்னுயிர்போலெண்ணி, சலித்திடாயொருபோதுந் தருமஞ் செய்யச் சந்தையங்கள்செய்யாதே சதிசெய்யாதே, சலித்திடவே கருமத் தால்பிறவிகிட்டுந்தருமத்தால்சாயுச்யபதவிகிட்டும் சலித்திடாய்சற்குரு வையடுத்துக்காரு சதாகாலஞ்சதாசிவனைப்போற்றிப்பாரே, ௩௭௧

கர்ப்பவியாதிக்கு எண்ணெய்.

போற்றினுலின்னமொரு எண்ணெய்கேளு புலத்தியனேபிள்ளையி ல்லாமலடியோர்க்கு, சாற்றுகிறேமேரண்ட எண்ணெய்நாழிதைவேளை யிலையுடனேயேரண்டத்திலையும், பார்த்திடவேமஞ்சளொடு கடுக்காயிந் துப்புபரிவானவெண்காரம் வெள்ளைப்பூண்டு, தோற்றிடவேகடுகுடனே விழுதிநிலாவரையுந் தொகைவைத்துகைமூன்றுபலமாய்த்தூக்கே. ()

தூக்கியேயம்மியிலே மைபோலாட்டித் தூரித முடலெண்ணெயி லே கலக்கிக்காய்ச்சி, தாக்கியேமெழுகுபத மாய்வடித்துத் தருவானகு ப்பியிலே பதனம்பண்ணி. வாக்கிலேவடிக்குமுன்னேகழஞ்சு நிறைடப் பா வண்மையுள்ளகள்ளிப்பால் கூட்டிக்கொண்டு, தேக்கியேகாண்டி நி றைநாலுநாள்கொண்டு திறமாகமூன்றுநாள்கொடுத்துக்கேளே. ௩௭௩

கேளப்பாபத்தியமோ உப்பாகாதுகிருபையுடன்மூன்றுவிசைகொ டுத்தாயானல், பாளப்பாருதகத்தின் வாயுகுத்துப்பக்கத்திற்சூலேயுடன்

வயிற்றுவலி தீர்ந்து, நாளப்பா பெண்களுக்குக் கர்ப்பமுண்டாம் நானூறுவயித்திய பூரணமாய்ச்சொன்னேன், கேளப்பா ஒருநாளுமில்லையில்லை குணமாகவின்னமொரு எண்ணெய்கேளே. ௩௭௪

சகலமேகஎண்ணெய்.

எண்ணெயென்றமேகவெண்ணெய் சொல்லக்கேளு மேரண்ட எண்ணெய்படியீருள்ளிச்சாற், நன்னயமாய்த்*தேசிச்சாற் செம்பொனெருஞ்சி நலமானகரிசாலை கற்பூரவள்ளி, பின்னையென்றபூவரசங்காய்சங்கங்குப்பி பிரியமுடன்வகைக்குச்சார் படியரைக்கால் சொன்னமேமெழுகுபதமாகக்காய்ச்சிக் சோதனைக்குஏழுநாளுப்பாகாதே. ௩௭௫

* தேசிச்சாறு-எலுமிச்சம்பழச்சாறு,

உப்பில்லாப்பத்தியமாய்க் குடிக்கும்போது உள்ளுருகிமேகநோய் உட்டினங்கள் தப்பில்லாக்கிரந்தியொடு அரையாப்புப்போகுந்தயவான யோனிப்புண் வெடிசூலைதீரும், ஒப்பில்லாமேகத்தின்வாயுகூட ஓடுமடா இனியேது வயித்தியந்தான், சொற்பமாய்ப்பாடி விட்டேனிந்த நூலில் சோதனைக்குப் பூரணத்தைப்போற்றிப்பாரே. ௨௭௬

பூரணநூல் மகுத்துவஞானம்.

போற்றினாலுனதுவினையகலுமப்பா பிறவியில்லாப் பதவியிலேபுனிதமாவாய், போற்றினால்பூரணமுங் கூடப்பேசும் பூதலத்தில்நீயுமொரு சித்தனாவாய், போற்றினாலென்னபல னில்லையென்றால் பொதியமலையெனக்கீகது புலத்தியாகேள் போற்றினேன்பூரணத்தின் கிருபை கண்டோம் புத்தியுடன்தானேதான் பூண்டுபாரே. ௩௭௭

தானான ஆதார சொரூபந்தன்னைச் சமர்த்தாகத்தானறிந்து தியானம்செய்து, தேனானபுலத்தியனே யறிவால்தானும் தேகத்திலுயிர்சிவமாய்த் தெரிந்துகொண்டு, வானானகேசரியில் மனக்கண்வைத்துமனங்கனிந்து ஓங்றீங்அம்என்றோத, கோனான ஆதார பூசைதானும்கோடான பூசைசெய்த பலத்துக்கொப்பே. ௩௭௮

ஓப்பென்றால்மனம்நிலைக்க உறுதிகேளு ஓமென்றபிரணவரேமூல பீடம், செப்பென்ற பீடமதில் றீங்காரமாலை சென்றிருந்த அகாரமதுசிவமுமாச்சு, குப்பென்றுதானெழுந்துவாசியாக்கிக்கொண்டுநின்றதிருவாசியமாவாசை, அப்பனே அகார ஆமாவாசை யறிந்துகொண்டுபௌரணையில் பூசைபண்ணே. ௩௭௯

பூசையென்றாலந்திசந்தி பூசைபண்ணு புண்ணியனே காயாதிகற்பங்கொண்டு, நேசமுடன்பூரணத்தைத்தினமும் போற்றி நினைவாகவு

னதுசடம்நிலைத்துப்போகும், பாசமென்றபாசமதை விலக்கிமைந்தாபக்குவமாயகாரமென்றால் சத்திசிவமாச்சு, பேசவொண்ணாச் சத்திசிவமூலந்தன்னைப் பெருமையுடன்தன்னிடமாய்ப் பேணிக்காணே. ௩௱௮௰

காணப்பாமயேந்திரமாங் கிரிக்கடுத்துக் கணநாதர்தனை நோக்கிப் பூசைசெய்தால், தோணப்பாஅம்மலையில் வாழுஞ்சாரை சுத்தமுள்ள வெண்சாரை நிலத்திற்பாயும், சாணப்பாபூமியிலேபாய்ந்தபின்பு சமர்த்தாகமையமதிற் பிடித்துக்கொண்டால், ஊணப்பாபிடித்தபிடி கையிவில்தங்கு முத்தமனேரண்டு துண்டு மொன்றும்பாரே. ௩௱௮௰௧

ஒன்றாகப்பூமியிலே ஓடிப்போகு முண்மையுடன்பிடித்தபிடியுள்ளேகொள்ளு, நன்றாகவருஷமொன்று அந்திசந்தி நாட்டமுடன்கொண்டுவரும் போதிலேதான், பண்டானவாசியது பாயாதப்பா பகர்ஞானசாயமது சித்தியுண்டாம், சென்றுடப்பத்திபந்தான் கடுகெள்ளெண்ணெய் திறமானசையோக மூன்றுசாதே. ௩௱௮௰௨

## மூலகிரி.

ஆசாது ஆண்டொன்றுசிவத்தைப்பூசி அப்பனேசத்தியிடகர்பங்கேளு, போகாதமூலகிரிதன்னில்நீயும் புத்தியுடன் சென்றுதவஞ்செய்தாயானால், ஆகாசந்தனிலிருந்து பூமிதன்னி லங்கரமாய்க்கருஞ்சாரைபாயுமுன்னே, தாகாசமந்திரந்தான் உம்மென்றோதித் தப்பித்துநமையம்பிடித்துக்கொள்ளே. ௩௱௮௰௩

கொள்ளப்பா ஆண்டொன்பது அந்திசந்தி குணமாகக் கொண்டுவாக்குணத்தைக்கேளு, பிள்ளப்பாமூலத்தில் அனலோமீறிப் பித்தமதுமேற்கொண்டு செந்தீபற்றி, துள்ளப்பாதேகமது இளைத்துக்கண்டால் தூங்கவே மூதண்டக்கியாழுங்கொள்ளு. நாள்ளப்பாஉகாரமதைப்பூசைசெய்ய நரையானதிரையகன்று நாட்டங்காணும். ௩௱௮௰௪

நாட்டமென்றால் சுழிமுனையில் நாட்டங்காணும் நடுமனையில் தீபஒளிநன்றாய்த்தோணும், தோட்டமென்ற பூரணத்தின் தீபங்கண்டால்திறமானதேகமதுவலுத்துப்போச்சு கூட்டமென்றசிவசத்திபூசைசெய்துகுணமானரண்டுகற்பங் கொண்டபின்பு,பாட்டமென்ன காலையிலேசிவத்தைப்பூசி பாலகனே மாலையிலே யுகாரங்கொள்ளே. ௩௱௮௰௫

கொள்ளவே ஆண்டுமொரு மூன்றுசென்றால் குணமான சட்டையது மூன்றுநீங்கி, விள்ளவேஆண்டுனக்கு முந்நாறுண்டு மிஞ்சாதுகுறைபாதுதிந்தி ரையுந்நீங்கி, வள்ளலார்திருநடனம் வெளியாய்த்தோ

ணு மைந்தனேரவிமதிய மென்றுய்க்காணும், மெள்ளவேவாசியென்ற குதிரையேறி மேலானபோதகிரியுச்சம்பாரே. ௩௮௬

போதகிரி,

உச்சமென்றபோதகிரி யுச்சந்தன்னில் உண்மையுடன் கர்ப்பூரதீபம்போலே, பச்சமுடன்சதாசிவமும் நாமும்கூடப் பதினெட்டுச்சித்தர்களுமங்கிருப்போம். இச்சையுடன்போதகிரி தன்னிலென்னை யேறிவந்துகண்டவுடனின்பமாக, அச்சமென்ற அச்சமதை யகற்றிமைந்தா அழியாதபதவியுனக் களிப்போம்பாரே. ௩௮௭

பாரப்பாபோதகிரி யார்தான்காண்பார் பாலகனேநவசித்தர் பார்த்தபோதம், நேரப்பா போதமென்றால் சிவபோதந்தான் நிலையாதபோதத்தை நிலைத்தோன் காணபான், மேரப்பா உச்சமென்றபோதங்கண்டு மேன்மையுட னழியாதபதவிபெற்றால், சாரப்பா சதாநந்த மணியை நீயும் சார்ந்திருனதுவினை தவறிப்போமே. ௩௮௮

சிவராசயோகம்

தவறிப் போஞ்சிவராச யோகங்கண்டால் தாரணியில்மற்றமற்ற யோகமெல்லாந் தவரிப்போம் மூச்சுடருமொன்றாய்க்கண்டால் தாழ்வானபிறப்பிறப்புந் தண்மையாகித், தவறாமல் ஞானவழிகண்டுமைந்தா தண்மையுடன் முக்கோணத்தறுகோணத்துள், தவறிப்போநாற்கோணம் ஐங்கோணத்துள் சதாசிவனுமொளிகண்டு வெளிசண்டோர்க்கே ()

கண்டோர்க்கே நாதவொலி காதில்கேட்கும் காணதை மடையருக்குவெளிதோணாது, பண்டோர்க்குவிட்டகுறை பற்றியேறும் பாவியர்க்குக் கிடைத்தாலும்மெட்டாதப்பா, விண்டோர்க்குக் கோடிபலனுண்டுசொன்னேன் வீணருக்கு விண்டதினால் நரகமெய்துமே அண்டர்பிரானருளதனை லிந்தநூலில் ஆதிதொடுத் தந்தம்வரை யடைவாய்ச்சொன்னேன், ௩௯௰

சொன்னடா நூல்தோறு மொளித்துசேதி சுத்தமுடனிச்சயமாய்ந் தோணச்சொன்னேன், முன்னேநான் பெருநூல்கள் அநந்தஞ்சொன்னேன் மிச்சமிந்தநூல்போலே யொன்றுங்காணேன்கண்ணனபுலத்தியனே யிந்தநூலைக் காட்டாதே உலகருக்குங்காட்டிடாதே,விண்ணோருஞ் சித்தர்களும் யோகியோரும் வேதாந்த வயித்தியபூரணமென்பாரே. ௩௯௧

பாரப்பாசத்திதனை மலையிலேபூசிபதிவானகாலையிலேசிவனைப்பூசி,
சாரப்பாநடுச்சாலை நடந்துபாரு சந்தையமோ பூரணத்தின் சார்புதோ
ணும், வாரப்பாபூசையென்றால் வாலைபூசை மந்திரமாயெட்டிரண்டுமெ
ழுந்துகண்டால், மேரப்பாமூலவழி பாதைகாணும்மேல்மூலகண்டுமெ
ள்ள விழித்துப்பாரே. ௩௱௯௨

விழித்துப்பார்த்திடவே பொரிதான்வீசும் முச்சந்திநடு வீதிதீபந்
தோன்றும், சுழித்தியிலேபோகாதே ஒருமனமாய்நின்றால் சுத்தமென்ற
நாதவொலி காதிற்கேட்கும், இழுத்துதென்றுநீகூடத்தொடர்ந்தாயானா
லெண்ணவொண்ணாப் பிறப்பிறப்புமெய்தும்பாரு, அழித்துமனஞ் சுழி
த்தேற்றிவிழித்துப்பாரு அரகராசிவசத்தியாட்டமாமே ௩௱௯௩

ஆட்டமென்றால் மணியினிடஆடடேஆட்டு அறையறிந்தால்சதா
சிவத்தினாட்டங்காணும், பாட்டைமிகப்பார்த்ததினா லென்னதோணும்
பாடறிந்த யோகியென்றால்பலுக்குந்தோணும், கூட்டமென்றால்வாசியி
ட கூட்டேகூட்டு கூட்டுவிட்டுபின்னொருத்தர்கூட்டேனப்பா, தீட்ட
மென்றால் சதாதீட்சைதீட்டேதீட்டுதீட்டறியநாட்செல்லுமரிதுதானே

அரிதாக இத்தனைநாள்மறைத்ததெல்லாமன்புடனேமறைபோலே
பொழிந்தேனிந்நூல், குரிதாகப் பாடிவைத்தே னிந்நூல் தன்னைக்கூறி
னேன் சகலமுமே வெளியாச்சொன்னேன், பெரிதாகப் பாராட்டுமிந்த
நூலைப் பேரின்பமுத்திதனைப்பெற வாயப்பா, சிறிதாங்க வெளியாங்கம்
செய்தாயானால் சிவசிவாரவிகோடிநரகமெய்தும். ௩௱௯௫

நரகமென்றநரகமதில்விழுதல்நன்றேநன்மையுள்ளசாயுச்சியம்பெ
றுதனன்றே, தெரிவையர்கள் சந்திநடுவிழுதனன்றே சிவஞானமுத்தி
பெற்று இருக்கனன்றே, பரிவான வாசிதனி லேறநன்றேபாழானஉல
கமதி லிருக்கநன்றே, தெரியாதே புலத்தியனே யிந்தநூலைத்தேசத்தில்
காட்டாதே சதிசெய்வாரே. ௩௱௯௬

நூல்கொடாதிருக்க,

சதிசெய்வாரிந்நூலை வெளிவிடாதே சதிராகவுலகத்தோர்கேட்பா
ருன்னை, விதியாலேநூல்தன்னை யீந்துவிட்டால் வீணனவனுன்னைமதியா
ன்வித்தையாலே, எதிராளியானவனும்உன்னைத்தானுமெவ்வளவும்போ
டாநீ வாடாவென்பான், குதிப்பாகக் குருவிந்தப் பாடுபட்டால் குவலய
த்தோர்படும்பாடு என்னசொல்வேன். ௩௱௯௭

சொல்வானே நான்தாண்டாகுருவுமென்பான்சோதனைக்குமாரண
த்தைச் செய்துபார்ப்பான், வெல்வானே யெளியோரை வலிமையாலே
வீணருக்கு நூல்கொடுத்தால்சாபமெய்தும், செல்லாத பணமொருநாள்
செல்லாதப்பா. சிவாயகுருநாதனென்றால் செல்லவைப்பான் வல்லோரு
க்கியாதே யோகிக்கீந்தால் வகைபான நூலதனைவணங்குவானே. ௩௯௮

வணங்குவார் சிவயோகிஞானயோகி மற்றமற்ற பேரெல்லாம்தூஷ
ணிப்பார், இணங்குவார்போலிருப்பா ரிணங்கார்பின்னே இந்நூல்கிட்டு
மட்டு மிணங்கிநிற்பார், பிணங்களுடனுறவுசெய்ய வேண்டாம் சொன்
னேன் புலத்தியனே பேரின்பவெளியைச்சொன்னேன், குணங்காமல்வ
ழிகூட்டி நடுவழியேநாடில் குருவானபரு . ர னெல்லைவெளியாமே, ()

வெளியானவெளியதுதான் பரஞ்சொரூபம்வேதாந்தரூபமடாசொ
ரூபாநந்தம், வழிபானவயித்திய பூரணமானந்தம்மகத்தானபூரணத்தினை
ர்த்தங்கண்டு, நெளியாமலாகாரங கடந்துமேலே, நெருப்பாறில் மயிர்ப்
பாலவழியேசென்று, அளியாத பரவெளியால் ஒளியா யோடமருவது
ஆனந்தபூரணமுமுற்றே. ௪௱

முற்றானபுலத்தியனே புலத்தியமகாரிஷியேமுச்சுடரு மாதியந்தம்
நன்றாய்ப்பாரு,சித்தானவயித்திய பூரணமீதப்பா ரேசத்திற்கிடையாது
திறமாய்க்கேளு, பத்தானபதிதனிலேவைத்துப்பூசிபதிதானவாசியது சி
த்தியாகும், வித்தானவினையறுக்கும் ஞானசித்தி வேதாந்தபூரணத்தின்
வெளிசேர்முற்றே, ௪௱க

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

பரிபூரணம் - ௪௱.

முற்றிற்று.